நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மணப்பாறை.
முன்னிலை: திரு. இரா. அசோக்குமார் B.Com, B.L .,
நீதித்துறை நடுவர், மணப்பாறை,
2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 04-ம் நாள் வியாழக்கிழமை
ஆண்டுபட்டிகை வழக்கு எண்.35/2024
(CNR.No.TNTP10-006060-2023)

சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம்

| | |
|---|---|
| குற்றமுறையீடுபவர் | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>வளநாடு காவல் நிலையம்,<br>குற்ற எண்.300/2020 |
| குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள்: | அஜீத்குமார்<br>த/பெ. பொன்னையா |
| குற்றப்பிரிவு | ச/பி.279, 337, 338, 304(A) IPC, r/w. 128, 129 MV Act. |
| வனையப்பட்டது | ச/பி.279, 337, 338, 304(A) IPC, r/w. 128, 129 MV Act. |
| தீர்மானம் | இறுதியாக எதிரி இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் 279, 337, 338, 304(A) r/w 128, 129 MV Act -ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து சட்டம் 279 பிரிவின் கீழான குற்றத்திற்கு ஆறுமாதங்கள் மெய்காவல் சிறை தண்டனையும், ரூ.1000/- அபராதம் விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும், இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 337 ன் கீழான குற்றத்திற்கு ஆறுமாதங்கள் மெய்காவல் சிறை தண்டனையும், ரூ.1000/- அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும், இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 338 ன்கீழான குற்றத்திற்கு ஆறுமாதங்கள் மெய்காவல் |

| | |
|---|---|
| | சிறை தண்டனையும், ரூ.1000/– அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும், இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 304(A)ன்கீழான குற்றத்திற்கு இரண்டு வருடம் மெய் காவல் சிறை தண்டனையும் ரூ.1000/– அபராதம் விதித்தும் அபராதம் கட்ட தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், மோட்டார் வாகனச்சட்டம் பிரிவு 128–ன் கீழான குற்றத்திற்கு ரூ.1000/– அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும், மோட்டார் வாகனச்சட்டம் பிரிவு 129–ன் கீழான குற்றத்திற்கு ரூ.1000/– அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும்,குற்றவியல் விசாரணைமுறை சட்டம் பிரிவு 255(2)–ன்படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிக்கு ஒவ்வொரு குற்றச்சாட்டின் கீழும் விதிக்கப்பட்டுள்ள தண்டனை ஏககாலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ.6000/– |

**குற்றம்சாட்டப்பட்டவர்கள் விபரம்**

| பெயர் | த.பெ. / க.பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|
| அஜீத்குமார் | பொன்னையா | இந்து | கூலி | 3/131, பொன்னையா தெரு, பெத்தநாயக்கன்பட்டி, பிராம்பட்டி அஞ்சல், மருங்காபுரி வட்டம், திருச்சி மாவட்டம். | 25/ 2024 |

**தேதி விவரங்கள்:–**

| | | |
|---|---|---|
| குற்ற நிகழ்வு நாள் | : | 28.05.2020 |
| புகார் கொடுத்த நாள் | : | 28.05.2020 |
| எதிரிகளை கைது செய்த நாள் | : | – |

| | | |
|---|---|---|
| பிணை விடுவிப்பு | : | 21.04.2021 (Bailed by Police) |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 11.06.2025 |
| விசாரணை முடிவு | : | 08.04.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | – |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 29.04.2021 |
| Date of Questioning | : | 05.05.2025 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | –– |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PW's Chief Cross<br>PW1 11.06.2025 27.10.2025<br>PW2 26.06.2025 26.06.2025<br>PW3 26.05.2025<br>PW4 04.07.2025 04.07.2025<br>PW5 04.07.2025 04.07.2025<br>PW6 14.07.2025<br>PW7 28.08.2025 28.08.2025<br>PW8 29.09.2025 29.09.2025 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 06.03.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது | : | |

| | | |
|---|---|---|
| செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | -- |

இவ்வழக்கானது 18.03.2024– ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 08.04.2026–ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **திரு. ஆனந்தகுமார் உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும்**, எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. A. லூர்துராஜ்** அவர்களும், ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது புகார்தாரரால் இந்திய குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு 173–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் படி எழுந்த வழக்காகும்.

**<u>2. குற்ற முறையீட்டின் சுருக்கம்</u>:–**

கடந்த 28.05.2020–ம் தேதி மாலை 18.40 மணிக்கு வாதி ஜெயமேரியின் கணவர் ஜான்பிரான்சிஸ் என்பவர் தனது இருசரக்கர வாகனம் TN 54 D 2230 என்ற பதிவெண் கொண்ட Honda Twister என்ற வாகனத்தில் திருச்சி – மதுரை ரோடு வலசுப்பட்டி பொன்னர்சங்கர் மழலையர் துவக்கப்பள்ளி அருகில் வடக்கில்

இருந்து தெற்கு நோக்கி டூவீலரில் சென்றபோது தெற்கில் இருந்து வடக்கு நோக்கி எதிர் திசையில் எதிரி அஜீத்குமார் என்பவர் TN 45 AQ 8239 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் வண்டியை அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் தலைகவசம் அணியாமலும் ராங் ரூட்டில் வாகனத்தை ஓட்டி வந்து சரியான திசையில் வந்த ஜான்பிரான்சிஸ் என்பவர் வாகனத்தில் மோதியதில் வாதியின் கணவர் ஜான்பிரான்சிஸ்க்கு இறப்பையும், மேலும் எதிரியின் வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து வந்த குமார் என்பவருக்கு கொடுங்காயத்தையும், ஆனந்தகுமாருக்கு சொற்பகாயத்தையும், எதிரி ஏற்படுத்தியுள்ளார்.

**<u>3. வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளிடம் வினவல்:</u>**

குற்ற பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டு, எதிரி முன்னிலையானவுடன் அவருக்கு மறக்காமல் இவ்வழக்கின் நகல்கள் அனைத்தும் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிக்கு எதிராக குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 240(1)ன் படி எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு U/S.279, 337, 338, 304(A) IPC, r/w. 128, 129 MV Act.–ன்படி குற்றம் சாட்டப்பட்டு குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 240 பிரிவின் கீழ் அவரிடம் வினவியபோது எதிரி பொய் வழக்கு என மறுத்து கூறியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**<u>4. விசாரணை:–</u>**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள்

குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் :–</u>**

(5.1) அ.சா.1. திருமதி. ஜெயமேரி தனது சாட்சியத்தில் 28.05.2020 அன்று மதியம் 02.00 மணியளவில் எனது மாமானருக்கு சர்க்கரை மாத்திரை உள்ளூரில் கொரனா நேரம் என்பதால் கிடைக்கவில்லை என்றும், அதனால் மாத்திரை வாங்குவதற்காக திருச்சிக்கு TN 54 D 2230 HONDA TWISTER இருசக்கரசவாகனத்தில் சென்றார் என்றும், 06.40 மணியளவில் எனக்கு செல்போனில் அழைப்பு வந்தது என்றும் எனது கணவருடன் வேலை பார்க்கும் சுந்தர் என்பவர் திருச்சி – மதுரை தேசிய நெடுஞ்சாலையில் பொன்னர் – சங்கர் மழலையர் துவக்கப்பள்ளிக்கு அருகே எனது கணவர் விபத்தில் மாட்டிக்கொண்டதாக தகவல் சொன்னார் என்றும், நானும், எனது பெரிய மகனும் சம்பவ இடம் சென்றோம் என்றும், சம்பவ இடத்தில் விசாரித்த போது அஜீத்குமார் என்பவர் வண்டி ஓட்டி வந்ததாகவும், ஆனந்த, குமார் ஆகிய இருவரும் பின்னால் அமர்ந்து வந்ததாகவும் TN 45 8239 என்ற Bajaj Discover இருசக்கரவாகனத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ராங்க்ரூட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து நேருக்கு நேராக எனது கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தார்கள் என்றும், எனது கணவருக்கு பின் மண்டையில் அடிப்பட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மணப்பாறை அரசு மருத்துவமனையில் சேர்ந்து விட்டதாகவும், விபத்து ஏற்படுத்திய மூவருக்கும் காலில் அடிப்பட்டதாக கூறினார்கள் என்றும், நானும், எனது பெரிய மகனும் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்த போது எனது கணவர் வரும் வழியில் இறந்துவிட்டதாக மருத்துவர் கூறினார் என்றும், விபத்து ஏற்படுத்திய அஜீத்குமார் மீது நடவடிக்கை எடுக்கும்படி வளநாடு காவல்நிலையத்தில் புகார்

கொடுத்தேன் என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா. 2 திரு. சுந்தரராஜன் தனது சாட்சியத்தில் கடந்த 28.05.2020 அன்று நான் எனது மனைவியை அரசு மருத்துவமனையில் இறக்கிவிட்டு திரும்பி பாலக்குறிச்சிக்கு செல்வதற்காக திருச்சி – மதுரை ரோட்டில் சென்றுகொண்டிருந்த போது பழைய பொன்னர் – சங்கர் பள்ளி அருகே நான் பார்க்கும்போது இருசக்கர வாகனம் பஜாஜ் டிஸ்கவர் அதிவேமாகவும், ராங்க் ரூட்டில் கைகாட்டியிலிருந்து திருச்சி ரோட்டில் நான் சென்று கொண்டிருந்த ரோட்டில் எதிரே வந்தார்கள் என்றும், அந்த வாகனத்தில் மூன்று பேர் வந்தார்கள் என்றும், எனக்கு முன்னால் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த ஜான்பிரான்சிஸ் என்பவர் மீது அந்த பஜாஜ் டிஸ்கவர் வாகனம் ராங்க் ரூட்டில் அதிவேமாக வந்து மோதி விபத்து ஏற்படுத்தியது என்றும், விபத்து ஏற்படுத்திய வானகமான Bajaj Discover பதிவு எண். TN 45 AQ 8239, ஜான்பிரான்சிஸ் சென்ற வாகனத்தின் பதிவு எண்.TN 54 D 2230 ஜான்பிரான்சிஸ் எனக்கு முன்பாக 10 முதல் 15 மீட்டர் தூரத்தில் சென்று கொண்டிருந்தார் என்றும், என்றும், கொரனா நேரம் என்பதால் பஸ் போக்குவரத்து அதிகமாக இல்லை என்றும், விபத்து ஏற்பட்டவுடன் அந்த வாகனத்தை சென்று பார்த்தேன் என்றும், விபத்துகுள்ளான நபர் எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவரது மனைவிக்கும், மகனுக்கும் போன் மூலம் தகவல் சொல்லி 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைத்தேன் என்றும், விபத்துகுள்ளான ஜான்பிரான்சிஸ்க்கு தலையில் பலத்த காயமும், முகத்தில் பலத்த காயமும் ஏற்பட்டிருந்தது என்றும், நெஞ்சு எலும்பில் ஒன்று வெளியே நீட்டியிருந்தது என்றும், ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் அவரது பெயர் அஜித்குமார், அவருடன் சேர்ந்து அந்த வாகனத்தில் மூன்று நபர்கள் வந்தார்கள் என்றும், அவருடன் வந்தவர்களுக்கும் காயம் ஏற்பட்டது என்றும், விபத்துகுள்ளான ஜான்பிரான்சிஸ்

மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்றபோது வரும் வழியில் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள் என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.3. திரு. ஆனந்த் தனது சாட்சியத்தில் 28.05.2020 அன்று ஆஜர் எதிரியும், அவரது நண்பர் குமார் என்பவரும் எனது வீட்டிற்கு வந்தார்கள் என்றும், அப்போது நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது எதிரே இருந்து ஒரு இருசக்கரவாகனத்திலிருந்து வந்தவர் அதிவேமாக வந்து எங்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், அதில் எங்கள் மூவருக்கும் காயம் ஏற்பட்டது என்றும் மோதியவருக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை என்றும், 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அவரை கொண்டு சென்றார்கள் என்றும், நாங்கள் சுகம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.4 திரு.வெள்ளத்துரை தனது சாட்சியத்தில் சுமார் 5 வருடத்திற்கு முன்பு வளநாடு – கைகாட்டி ரோட்டில் திருச்சி ஹைவேஸில் முதல் நாள் நடந்த விபத்து சம்மந்தமாக மறுநாள் காலை 07.00 மணியளவில் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரித்து வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக நானும், செல்வராஜீம் சாட்சி கையெழுத்து செய்தோம் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.5) அ.சா.5. திரு.சுரேஷ் (மருத்துவர்) தனது சாட்சியத்தில் கடந்த 28.05.2020 அன்று பணியில் இருக்கும் போது முருகன் மகன் குமார் என்பவர் இருசக்கரவாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போது மற்றொரு இருசக்கரவாகனம் மோதி விபத்தானதில் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார் என்றும், அவர் பரிசோதனை செய்த போது வலது காலில் வெட்டு

காயம் இருந்தது என்றும், வலது முட்டியில் மற்றொரு வெட்டு காயம் இருந்தது மற்றும் கீழ் உதட்டில் வெட்டு காயம் இருந்தது என்றும், மேலும் வலது தொடை எலும்பில் எலும்பு முறிவு இருந்தது என்றும், அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு 29.05.2020 அன்று நோயாளியின் சொந்த விருப்பத்தின் பெயரில் எங்களது மருத்துவமனையிலிருந்து டிஸ்ஜார்ஜ் செய்யப்பட்டார் என்றும், அதே விபத்தில் இருசக்கரவாகனத்தில் மூன்று நபர்கள் சென்றுகொண்டிருக்கும் போது மற்றொரு இருசக்கரவாகனத்தோடு மோதிய விபத்தில் ஆனந்தகுமார் வயது 21, காயம் ஏற்பட்டதாக மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார் என்றும், அவரை பரிசோதித்த போது வலது காலில் வெட்டு காயம் இருந்தது என்றும், வலது முட்டியில் மற்றொரு வெட்டு காயம் காணப்பட்டது என்றும், வலது கணுக்காலில் மற்றொரு வெட்டு காயம் காணப்பட்டது என்றும், அவருக்கு சிகிச்சை அளித்து 29.05.2020 அன்று மருத்துவமனையிலிருந்து டிஸ்ஜார்ஜ் செய்யப்பட்டார் என்றும், அவருக்கு ஏற்பட்ட காயம் சிறு காயம் என சான்று வழங்கினேன் என்றும், மேலும் அதே விபத்தில் அஜீத்குமார் வயது 22 என்ற நபர் மற்றொரு இருசக்கரவாகனத்தோடு மோதிய விபத்தில் மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டார் என்றும், அவரை பரிசோதித்த போது அவருக்கு வலது காலில் வெட்டு காயம் காணப்பட்டது என்றும், வலது முட்டியில் மற்றும் தொடையில் வெட்டு காயங்கள் இருந்தது என்றும், வலது கை எலும்பு முறிந்து காணப்பட்டது என்றும், முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு 29.05.2020 அன்று சொந்த விருப்பத்தின் பேரில் மருத்துவமனையிலிருந்து டிஸ்ஜார்ஜ் செய்யப்பட்டார் என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.6) அ.சா.6. திரு.மகாலிங்கம் (மருத்துவர்) தனது சாட்சியத்தில் கடந்த 29.05.2020 அன்று மதியம் 01.25 மணிக்கு குமார் என்பவரை அவரது தந்தை முருகேசன் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார் என்றும்,

28.08.2020 அன்று மாலை 05.00 மணிக்கு அவர் சென்ற இருசக்கரவாகனமும், மற்றொரு இருசக்கரவாகனமும் வலசுப்பட்டி அருகில் மோதிக்கொண்டு அதனால் காயம் ஏற்பட்டதாக சொன்னார் என்றும், இதற்கு முன்பு மணப்பாறை சுகம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததாக சொன்னார் என்றும் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன. 1. வலது முழுங்கால் மூட்டில் ஒரு தையல் போட்ட காயம் இருந்தது. 2. வலது பெருவிரலில் ஒரு தையல் போட்ட காயம் இருந்தது. 3. வலது பக்க முகத்தில் சிராய்ப்பு காயம் இருந்தது. 4. வலது முழுங்கால் மூட்டில் சிராய்ப்பு காயம் இருந்தது. 5. வலது இடுப்பில் வீக்க காயம் இருந்தது. அவருக்கு நுண்கதிர் படம் எடுத்ததில் வலது தொடை எலும்பு உடைந்திருந்தது என்றும், அவருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு 04.06.2020 அன்று மருத்துமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்றும், அவருக்கு 5 வது காயம் கொடுங்காயம் என்றும், மற்ற காயங்கள் சாதாரண காயங்கள் என்றும் சான்று வழங்கினேன் என்றும், வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.7) அ.சா.7. திரு. மணிவண்ணன் (மோட்டார் வாகன ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் கடந்த 16.07.2020 அன்று மணப்பாறை போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்தபோது வளநாடு காவல் நிலைய கு.எண்.300/2020, சட்ட பிரிவுகள் 279, 337, 304(A) IPC–ன் படியான வழக்கில் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தை பெற்று அலுவலகத்தில் வைத்து TN 54 D 2230 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தினை ஆய்வு செய்தேன் என்றும், ஆய்வின்போது காணப்பட்ட சேதவிபரங்கள் பின்வருமாறு Scoop வலது புறம் சேதமடைந்திருந்தது என்றும், முகப்பு விளக்கு அசம்லி உடைந்த நிலையில் இருந்தது என்றும், புட் பிரேக் வளைந்த நிலையில் இருந்தது என்றும், வலது புற முன் புட்ரெஸ்ட் வளைந்த நிலையில் இருந்தது என்றும், பெட்ரோல் டேங்க் வலது புறம் உள்நோக்கி

வளைந்த நிலையில் இருந்தது என்றும், மேற்சொன்ன சேதாரங்களினால் வாகனத்தை இயக்கி பார்க்க இயலவில்லை என்றும், மேற்படி வாகன விபத்தானது இயந்திர கோளரினால் ஏற்பட்டது அல்ல என்று சான்றளித்துள்ளேன் என்றும், மேலும் இதே வழக்கில் தொடர்புடைய TN 45 AQ 8239 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தினை 22.04.2021 அன்று அலுவகத்தில் வைத்து ஆய்வு செய்தேன் என்றும், ஆய்வின்போது காணப்பட்ட சேதவிபரங்கள் பின்வருமாறு புட் பிரேக் பெடல் உடைந்த நிலையில் இருந்தது என்றும், வலது புற முன் புட்டெஸ்ட் வளைந்த நிலையில் இருந்தது என்றும், Scoop மேல் புறம் உடைந்த நிலையிலும், வலது மற்றும் இடது புறம் சிராய்ப்புகளும் இருந்தது என்றும், வாகனத்தை சாலையில் இயக்கிபார்த்து ஆய்வு செய்ய இயலவில்லை என்றும், மேற்படி வாகனவிபத்தானது இயந்திர கோளரினால் ஏற்பட்டது அல்ல என்று சான்றளித்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.8) அ.சா.8. திரு.ராஜகோபால் (காவல் உதவி ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் கடந்த 28.05.2020 அன்று 21.00 மணிக்கு வளநாடு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது பாலக்குறிச்சி, படையாச்சி தெருவை சேர்ந்த ஜான்பிரான்சிஸ் மனைவி ஜெயமேரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று வளநாடு காவல்நிலைய குற்ற எண். 300/2020, u/s.279,337,304(A) IPC and 129 MV Act ன் படி வழக்கு பதிவு செய்து மேல் விசாரணைக்காக துவரங்குறிச்சி வட்ட காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.9) அ.சா.9. திரு. குமார் தனது சாட்சியத்தில் சுமார் 4 வருடத்திற்கு முன்பு காரணிப்பட்டி அருகே உள்ள எனது நண்பர் ஆனந்தகுமார் வீட்டின்

அருகே நானும், ஆஜர் எதிரியும், ஆனந்த்குமாரும் நின்றுகொண்டிருந்தோம் என்றும் மாலை 06.00 மணியளவில் எனது நண்பர் ஆனந்த்குமாரை பெட்ரோல் போடுவதற்கு பணம் எடுப்பதற்காக வீட்டிற்கு அனுப்பிவைத்தேன் என்றும், ஆனந்த்குமார் பணம் எடுத்து வந்தவுடன் நாங்கள் மூவரும் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், எதிர்திசையிலிருந்து வந்த பைக் ஒன்று என் மீது மோதிவிட்டது என்றும் எனக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், ஆஜர் எதிரிக்கும், ஆனந்த்குமாருக்கும் சிறு சிறு காயங்கள் ஏற்பட்டது என்றும், என் மீது மோதியவருக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை. ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னோம் என்றும், எதிரியோடு நாங்கள் மூவரும் சுகம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.10) அ.சா.10. திருமதி. ஜெயதேதி (காவல் ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் கடந்த 2020 ம் ஆண்டு துவரங்குறிச்சி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது வளநாடு காவல்நிலைய குற்ற எண். 300/2020 u/s. 279, 337,304(A) IPC r/w 129 MV Act வழக்கை உதவி ஆய்வாளர் இராஜகோபால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணைக்காக தனது பார்வைக்கு வைத்தார் என்றும், நான் இவ்வழக்கை 29.05.2020 ம் தேதி காலை சுமார் 06.00 மணிக்கு புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 07.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வராஜ், வெள்ளத்துரை ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தேன் என்றும், பின்னர் இவ்வழக்கில் இறந்து போன ஜான்பிரான்சிஸ் என்பவரது பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோர்களுக்கு சம்மன் சார்வு செய்து இறந்த போன பிரேத்தின் மீது மணப்பாறை அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று பிரேத விசாரணை மேற்கொண்டேன் என்றும் சாட்சிகள் செல்வராஜ், வெள்ளத்துரை, ஜெயமேரி, சுந்தராஜன்,

சேகர்,சரவணக்குமார்,மோகன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இறப்பிற்காக காரணம் அறியும் பொருட்டு ஜான்பிரான்சிஸ் என்பவரின் பிரேத்தின் மீது பிரேத பரிசோதனை செய்ய காவலர் மைக்கேல் டிசோசா மூலம் மணப்பாறை அரசு மருத்துவமனை தலைமை மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன் என்றும், பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் மற்றும் நிலைய காவலர் மைக்கேல் டிசோசா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்பு நான் பணிமாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பை பின் வரும் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.11) அ.சா.11 திரு. பாலாஜி(காவல் ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் கடந்த 28.04.2021 ம் தேதி பணியிலிருந்த போது வளநாடு காவல்நிலைய குற்ற எண். 300/2020 சட்டப்பிரிவுகள் 279,337,304(A) r/w 129 MV Act வழக்கு நாட்குறிப்பை பார்வையிட்டு விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றும், சம்பவம் இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகளை விசாரணை செய்தேன் என்றும், மேற்படி சாட்சிகள் ஆய்வாளர் திருமதி. ஜெயதேவி என்பவரிடம் கூறிய சங்கதிகளை என்னிடம் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், பின்னர் 29.04.2021 ம் தேதி இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மணப்பாறை அரசு மருத்துவமனை சென்று இறந்த ஜான்பிரான்சிஸ் என்பவரின் பிரேத பரிசோதனை சான்றுபெற்றும் மருத்துவர் திரு. பிரகாஷ் என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அன்றைய தினமே மணப்பாறை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. மணிவண்ணன் என்பவரை விசாரித்து இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்கள் TN 54 D 2230 HONDA TWISTER, TN 45 AQ 8239 BAJAJ DISCOVER ஆகியவற்றின் வாகன ஆய்வு அறிக்கை பெற்று அவரது

வாக்குமூலத்தை பதிவு செய்தேன் என்றும், பின்னர் அன்றைய தினமே சாட்சி குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. மகாலிங்கம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன் என்றும், பின்னர் மருத்துவர் திரு. சுரேஷ் என்பவரை விசாரித்தும் சாட்சி ஆனந்தகுமாருக்கு காயச்சான்று பெற்று வாக்குமுலத்தை பதிவு செய்தேன் என்றும், பின்னர் இவ்வழக்கில் சாட்சி குமாருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்கம் என மருத்துவர் சான்று வழுங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 279, 337, 304(A) r/w 129 MV Act லிருந்து 279, 337, 338, 304(A) r/w 128, 129 MV Act சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன் என்றும், பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளாரே? அதற்கு நீர் என்ன முகாந்திரம் கூறுகிறீர் ?

**<u>6. குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 313 (1) (b) பிரிவின் படியான நடவடிக்கை:</u>**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமான தோன்றிய விஷயங்கள் குறித்து குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 313 (1) (b) பிரிவின்படி கேள்விகள் கேட்க எதிரி தரப்பில் சாட்சியங்களை மறுத்து பொய் சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி வேறு ஏதாவது கூற வேண்டுமா என்று வினவிய போது பொய் வழக்கு என்றும், எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவிய போது சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். பின்பு எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை இல்லை என்று குறிப்புரை செய்ததன் பெயரில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது எதிரிகளின் மீது சட்ட பிரிவுகள் 279, 337, 338, 304(A) IPC, r/w. 128, 129 MV Act.–ன் கீழ் வனையப்பட்ட குற்றச் சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**8. தீர்வு:**

**(8.1).** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்திய தண்டனை சட்டம் பிரிவு 279, 337, 338, 304(A) r/w 128, 129 MV Act –ன் கீழ் குற்றம் நிரூபணம் செய்யப்பட இந்த வழக்கில் அரசு தரப்பு முதலாவதாக விபத்து ஏற்படுத்திய வண்டி அடையாளப்படுத்துதலும், இரண்டாவதாக விபத்து ஏற்படுத்திய வண்டியை எதிரி தான் தகா துணிச்சல் அல்லது கவனக்குறைவாக ஓட்டினார் என்றும், மூன்றாவதாக எதிரி வாகனத்தை மனித உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் ஓட்டியுள்ளார் என்றும், அவ்வாறு ஓட்டி சாதாரண காயம் மற்றும் கொலைக்கு நிகராத மரணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும் அரசு தரப்பில் நிரூபிக்கவேண்டும்.

**(8.2).** உச்சநீதிமன்றம் **Ravikapur Vs Stae of Rajasthan 2012 AIR SC 2986** என்ற வழக்கில் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவாக வாகன ஓட்டுதல் **rash and negligent driving** பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளது. மேற்படி முன் தீர்ப்பின்படி அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல் **rash and negligent driving** ல் நேரடியான சாட்சியம் அல்லது சுற்றியுள்ள சூழ்நிலைகள் மற்றும் அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல் அனுமானம் **Attendant circumstances and inference of rash and negligent driving** மூலம் நிரூபணம் செய்யப்படலாம், மேலும் சுற்றியுள்ள சூழ்நிலைகள் மூலம் வழக்கானது நிரூபணம் செய்யப்படும் நிலையில் "செயலே செப்பும்"**(doctrine of res ipsa loquitur)**

பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது. மேற்காணும் சட்ட கொள்கைகளின் அடிப்படையில் தற்போதுள்ள இவ்வழக்கின் பொருண்மைகள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்யலாம்.

**(8.3)** எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் எதிரி தரப்பில் விபத்தானது எதிரியால் நடைபெறவில்லை என்றும், எதிரி வாகனத்தை கவனமாக ஓட்டி சென்றார் என்றும், இந்த விபத்திற்கு காரணமே இறந்த நபர் எதிரே வந்த காரை கவனிக்காமல் திடீரென்று காண குறைவாகவும், அஜாக்கிரையாக சென்று காரின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார் என்றும், இறந்த நபருக்கு இழப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கு தவறுதலாக எதிரியின்மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், பட்டியல் சாட்சிகள் உறவினர்கள் என்றும் வாதிட்டு எதிரி மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று எதிரியை விடுதலை செய்யக் கோரினார்.

**(8.4)** நலன் கொண்டசாட்சிகளின் சாட்சியம் பற்றி மாண்புமிகு உச்சநீதிமன்றம் முன்பு தீர்ப்பு **Piara Singh v. State of Punjab [Piara Singh v. State of Punjab, (1977) 4 SCC452** எனும் வழக்கில்

> "... It is well settled that the evidence of interested or inimical witnesses is to be scrutinised with care but cannot be rejected merely on the ground of being a partisan evidence. If on a perusal of the evidence the Court is satisfied that the evidence is creditworthy there is no bar in the Court relying on the said evidence."என்று கூறியுள்ளது.

**(8.5).** அரசு தரப்பில் மேற்படி வழக்கு சம்பவத்தன்று கடந்த 28.05.2020-ம் தேதி மாலை 18.40 மணிக்கு வாதி ஜெயமேரியின் கணவர் ஜான்பிரான்சிஸ்

என்பவர் தனது இருசரக்கர வாகனம் TN 54 D 2230 என்ற பதிவெண் கொண்ட Honda Twister என்ற வாகனத்தில் திருச்சி – மதுரை ரோடு வலசுப்பட்டி பொன்னர்சங்கர் மழலையர் துவக்கப்பள்ளி அருகில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி டூவீலரில் சென்றபோது தெற்கில் இருந்து வடக்கு நோக்கி எதிர் திசையில் எதிரி அஜீத்குமார் என்பவர் TN 45 AQ 8239 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் வண்டியை அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் தலைகவசம் அணியாமலும் ராங் ரூட்டில் வாகனத்தை ஓட்டி வந்து சரியான திசையில் வந்த ஜான்பிரான்சிஸ் என்பவர் வாகனத்தில் மோதியதில் வாதியின் கணவர் ஜான்பிரான்சிஸ்க்கு இறப்பையும், மேலும் எதிரியின் வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து வந்த குமார் என்பவருக்கு கொடுங்காயத்தையும், ஆனந்தகுமாருக்கு சொற்பகாயத்தையும், எதிரி ஏற்படுத்தியுள்ளார்.

**(8.6).** அ.சா.7. திரு. மணிவண்ணன் (மோட்டார் வாகன ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் குற்ற எண். கு.எண்.300/2020, சட்டப்பிரிவுகள் U/s. 279, 337, 304(A) IPC–ன் படியான வழக்கில் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தை பெற்று அலுவலகத்தில் வைத்து TN 54 D 2230 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தினை ஆய்வு செய்தேன் என்றும், ஆய்வின்போது காணப்பட்ட சேதவிபரங்கள் பின்வருமாறு Scoop வலது புறம் சேதமடைந்திருந்தது. முகப்பு விளக்கு அசம்லி உடைந்த நிலையில் இருந்தது என்றும், புட் பிரேக் வளைந்த நிலையில் இருந்தது என்றும், வலது புற முன் புட்ரெஸ்ட் வளைந்த நிலையில் இருந்தது என்றும், பெட்ரோல் டேங்க் வலது புறம் உள்நோக்கி வளைந்த நிலையயில் இருந்தது. மேற்படி வாகன விபத்தானது இயந்திர கோளரினால் ஏற்பட்டது அல்ல என்று சான்றளித்துள்ளேன் என்றும், மேலும் இதே வழக்கில் தொடர்புடைய TN 45 AQ 8239 என்ற பதிவெண்

கொண்ட இருச்சக்கர வாகனத்தினை ஆய்வு செய்தேன் என்றும், ஆய்வின்போது காணப்பட்ட சேதவிபரங்கள் பின்வருமாறு புட் பிரேக் பெடல் உடைந்த நிலையில் இருந்தது என்றும், வலது புற முன் புட்டெஸ்ட் வளைந்த நிலையில் இருந்தது. Scoop மேல் புறம் உடைந்த நிலையிலும், வலது மற்றும் இடது புறம் சிராய்ப்புகளும் இருந்தது என்றும், மேற்படி வாகனவிபத்தானது இயந்திர கோளரினால் ஏற்பட்டது அல்ல என்றும் சான்று அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(8.7)** மேற்படி அ.சா.7–ன் சாட்சியத்தில் இருந்து TN 45 AQ 8239 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தினை ஆய்வு செய்தேன் என்றும், ஆய்வின்போது காணப்பட்ட சேதவிபரங்கள் பின்வருமாறு புட் பிரேக் பெடல் உடைந்த நிலையில் இருந்தது என்றும், வலது புற முன் புட்டெஸ்ட் வளைந்த நிலையில் இருந்தது. Scoop மேல் புறம் உடைந்த நிலையிலும், வலது மற்றும் இடது புறம் சிராய்ப்புகளும் இருந்தது என்றும், மேற்படி வாகனவிபத்தானது இயந்திர கோளரினால் ஏற்பட்டது அல்ல என்றும், முன்பகுதிகள் சேதம் அடைந்ததாக குறிப்பிட்டுள்ளார். மேற்கண்ட சேதத்தின் வாயிலாக முன்பக்கம் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்பது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் அ.சா.5–ன் சாட்சியத்தின் வாயிலாக எதிரியின் வாகனம் விபத்துக்கு உட்பட்டது என்பது தெளிவாக தெரிய வருகின்றது.

**(8.8)**. அ.சா.5. திரு. சுரேஷ் (மருத்துவர்) தனது சாட்சியத்தில் கடந்த 28.05.2020 அன்று பணியில் இருக்கும் போது முருகன் மகன் குமார் என்பவர் இருசக்கரவாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போது மற்றொரு இருசக்கரவாகனம் மோதி விபத்தானதில் மருத்துவமனைக்கு அழைத்து

வரப்பட்டார் என்றும், அவர் பரிசோதனை செய்த போது வலது காலில் வெட்டு காயம் இருந்தது. வலது முட்டியில் மற்றொரு வெட்டு காயம் இருந்தது மற்றும் கீழ் உதட்டில் வெட்டு காயம் இருந்தது என்றும், மேலும் வலது தொடை எலும்பில் எலும்பு முறிவு இருந்தது என்றும், அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு 29.05.2020 அன்று நோயாளியின் சொந்த விருப்பத்தின் பெயரில் எங்களது மருத்துவமனையிலிருந்து டிஸ்ஜார்ஜ் செய்யப்பட்டார். **அதே விபத்தில் இருசக்கரவாகனத்தில் மூன்று நபர்கள் சென்றுகொண்டிருக்கும் போது மற்றொரு இருசக்கரவாகனத்தோடு மோதிய விபத்தில் ஆனந்தகுமார் வயது 21, காயம் ஏற்பட்டதாக மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார் என்றும், அவரை பரிசோதித்த போது வலது காலில் வெட்டு காயம் இருந்தது என்றும், வலது முட்டியில் மற்றொரு வெட்டு காயம் காணப்பட்டது என்றும் வலது கணுக்காலில் மற்றொரு வெட்டு காயம் காணப்பட்டது என்றும்,** அவருக்கு சிகிச்சை அளித்து 29.05.2020 அன்று மருத்துவமனையிலிருந்து டிஸ்ஜார்ஜ் செய்யப்பட்டார் என்றும், அவருக்கு ஏற்பட்ட காயம் சிறு காயம் என சான்று வழங்கினேன் என்றும் மேலும் அதே விபத்தில் அஜீத்குமார் வயது 22 என்ற நபர் மற்றொரு இருசக்கரவாகனத்தோடு மோதிய விபத்தில் மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டார் என்றும், அவரை பரிசோதித்த போது அவருக்கு வலது காலில் வெட்டு காயம் காணப்பட்டது என்றும், வலது முட்டியில் மற்றும் தொடையில் வெட்டு காயங்கள் இருந்தது என்றும், வலது கை எலும்பு முறிந்து காணப்பட்டது என்றும், முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு 29.05.2020 அன்று சொந்த விருப்பத்தின் பேரில் மருத்துவமனையிலிருந்து டிஸ்ஜார்ஜ் செய்யப்பட்டார் என்றும், வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்பது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் அ.சா.5–ன் சாட்சியத்தின் வாயிலாக எதிரியின் வாகனம் விபத்துக்கு உட்பட்டது என்பது தெளிவாக தெரிய வருகின்றது.

**(8.9).** அ.சா.6. திரு. மகாலிங்கம் (மருத்துவர்) தனது சாட்சியத்தில் கடந்த 29.05.2020 அன்று மதியம் 01.25 மணிக்கு குமார் என்பவரை அவரது தந்தை முருகேசன் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார் என்றும், 28.08.2020 அன்று மாலை 05.00 மணிக்கு அவர் சென்ற இருசக்கரவாகனமும், மற்றொரு இருசக்கரவாகனமும் வலசுப்பட்டி அருகில் மோதிக்கொண்டு அதனால் காயம் ஏற்பட்டதாக சொன்னார் என்றும், இதற்கு முன்பு மணப்பாறை சுகம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததாக சொன்னார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

" மேற்படி மருத்துவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் இரண்டு இருசக்கர வாகனங்கள் மோதிக்கொண்டால் மேற்படி காயங்கள் ஏற்படும் என்றால் சரிதான் என அரசு தரப்பிற்கு ஆதரவாக வாக்குமூலம் அளித்துள்ளார். நின்று கொண்டிருந்த வாகனத்தின் மீது இயங்கிக் கொண்டிருக்கும் வாகனம் ஒரு பக்கமாக மோதினால் இதுபோன்று சேதாரங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் இல்லை. எனது ஆய்வை பொருத்தவரை இரண்டு வாகனங்களும் இயங்கிக் கொண்டிருந்த போதுதான் விபத்து ஏற்பட்டது என்று அ.சா.7 ஐ எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார்."

**(8.10).** திரு. வெள்ளைத்துரை தனது சாட்சியத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் என்றும், 15.08.2022 அன்று சுமார் 5 வருடத்திற்கு முன்பு வளநாடு கைகாட்டி ரோட்டில் திருச்சி ஹைவேசில் முதல் நாள் நடந்த விபத்து சம்பந்தமாக மறுநாள் காலை 07.00 மணியளவில் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரித்து வரைபடம் வரைந்துகொண்டிருந்தார்கள். அதற்கு சாட்சியாக நானும்,

செல்வராஜும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தின் வாயிலாக அவரது சாட்சியத்திலிருந்து சம்பவம் பற்றியும் சம்பவம் நடந்த இடம் பற்றியும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்.

**(8.11).** சம்பவ இடத்தில் விசாரித்தபோது அஜீத்குமார் என்பவர் வண்டி ஓட்டி வந்ததாகவும், ஆனந்த், குமார் ஆகிய இருவரும் பின்னால் அமர்ந்து வந்ததாகவும் TN 45 8239 என்ற Bajaj Discover இருச்சகர வாகனத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ராங்க்ரூட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து நேருக்கு நேராக எனது கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தார்கள். விபத்து ஏற்படுத்திய அஜீத்குமார் மீது நடவடிக்கை எடுக்குமாறு வளநாடு காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் புகாரை யார் எழுதினார் என்றால் நான்தான் எழுதினேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(8.12).** அ.சா.2 திரு. சுந்தர்ராஜன் தனது சாட்சியத்தில் கடந்த 28.05.2020 அன்று நான் எனது மனைவியை அரசு மருத்துவமனையில் இறக்கிவிட்டு திரும்பி பாலக்குறிச்சிக்கு செல்வதற்காக திருச்சி – மதுரை ரோட்டில் சென்றுகொண்டிருந்த போது பழைய பொன்னர் – சங்கர் பள்ளி அருகே நான் பார்க்கும் போது இருசக்கர வாகனம் பஜாஜ் டிஸ்கவர் அதிவேமாகவும், ராங்க் ரூட்டில் கைகாட்டியிலிருந்து திருச்சி ரோட்டில் நான் சென்று கொண்டிருந்த ரோட்டில் எதிரே வந்தார்கள் என்றும் அந்த வாகனத்தில் மூன்று பேர் வந்தார்கள் என்றும் எனக்கு முன்னால் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த ஜான்பிரான்சிஸ் என்பவர் மீது அந்த பஜாஜ் டிஸ்கவர் வாகனம் ராங்க் ரூட்டில் அதிவேமாக வந்து மோதி விபத்து ஏற்படுத்தியது. விபத்து ஏற்படுத்திய வானகமான Bajaj Discover பதிவு எண். TN 45 AQ 8239,

ஜான்பிரான்சிஸ் சென்ற வாகனத்தின் பதிவு எண்.TN 54 D 2230 ஜான்பிரான்சிஸ் எனக்கு முன்பாக 10 முதல் 15 மீட்டர் தூரத்தில் சென்று கொண்டிருந்தார் என்றும் என்றும் கொரனா நேரம் என்பதால் பஸ் போக்குவரத்து அதிகமாக இல்லை. விபத்து ஏற்பட்டவுடன் அந்த வாகனத்தை சென்று பார்த்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவரது சாட்சியத்தின் வாயிலாக விபத்தினை நேரடியாக பார்த்தது குறித்தும், விபத்து ஏற்படுத்திய ஓட்டுநரை அடையாளம் குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(8.13).** இந்த வழக்கின் சம்பவம் இடம் குறித்து காணும்பொழுது வழக்கு விபத்து நடந்த சாலையானது நன்கு அகலமான சாலையாக பார்வை மகஜர் அ.சா.ஆ.10 மற்றும் மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மேற்படி ஆவணங்கள் தயார் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகஜரில் சம்பவ இடமானது மதுரை – திருச்சி செல்லும் NH சாலையில் நடைபெற்றுள்ளது என்று குறிக்கப்பட்டுள்ளது. அதன் வாயிலாக இறந்துபோனவர் ஓட்டிவந்த வாகனத்தின்மீது பஜாஜ் டிஸ்கர் டூவீலரில் மூன்று நபர்கள் ராங் ரூட்டில் வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மோதி விபத்தினை ஏற்படுத்தியுள்ளார் என அவரது சாட்சியத்தின் வாயிலாக தெரியவருகிறது.

**(8.14).** எதிரி TN 45 AQ 8239 என்ற எண்ணுள்ள Bajaj Discover என்ற இருசக்கர வாகனத்தினை தகாதுணிச்சல் அல்லது கவனக்குறைவாக ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினாரா? என்பதை காண வேண்டும். இதுகுறித்து காணும் போது இந்த வழக்கில் எந்த சாட்சிகளும் குறிப்பாக எதிரி தகாதுணிச்சல் அல்லது கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி வந்தார் என்று குறிப்பிட்டு மேற்படி வார்த்தைகளை பயன்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை. ஆனால் அ.சா.2. தனது

சாட்சியத்தில் சம்பவத்தை பார்த்து எதிரியால் விபத்து ஏற்படுத்தப்பட்டது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**(8.15).** அ.சா.2. அவரது சாட்சியத்தில் குறிப்பாக தகாதுணிச்சல் அல்லது கவனக்குறைவு போன்ற வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளார். அவர்களது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை உள்ளிட்ட மொத்த சாட்சியத்தை கவனத்தில் கொள்ளும்போது, எதிரி வாகனத்தை சாதாரண நிலையில் மனிதர்கள் இயக்குவதைவிட சற்று மாறுபட்ட நிலையில் ஆபத்தான முறையில் அதிவேகமாகவும் abnormal–ஆக வாகனத்தை ஓட்டி உள்ளார் என்பது தெரிகிறது.

**(8.16).** மேலும் இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள தகாதுணிச்சல் மற்றும் கவனக்குறைவு பற்றி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் முன்பு தீர்ப்பு in re ; Nidamorti Nagabhusanam 7 Mad H.C.R. 119 வழக்கில் நீதியரசர் Holloway J கூறியுள்ள சட்ட கோட்பாட்டை மாண்புமிகு உச்சநீதிமன்றம் Rathnashaivan Vs State of karnataka 2007 (3)SCC474 என்னும் வழக்கில் எடுத்துரைத்துள்ளது.

மேற்படி முன் தீர்ப்புகளின் படி Rationals is acting with the with CVS and illegal consequences may follow but with they will not and with the believe that the actors taken sufficient precautions to prevent the happening the immutability RSS from acting respect conscious

**(8.17).** விபத்து சமயத்தில் வாகனத்தை ஓட்டினார் என்றும் அதனால் விபத்து ஏற்பட்டது என்றும், மேலும் சொல்லப்பட்டுள்ள **RAVI Kapur supra** சுட்டிக் காட்டப்பட்டுள்ளபடி இந்த வழக்கில் முதல் தோற்ற சாட்சியாக **(Prima facie**

**evidence)**வாகனத்தினை அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தி உள்ளார் என்று தீர்வு கண்டுள்ள நிலையில் தொடர்ந்து வரும் சூழ்நிலைகள் மற்றும் கவனக்குறைவாகவும், அஜாக்கிரையாகவும் வாகனம் ஓட்டுதல் குறித்து அனுமானம் **attendant circumstan ces and inferences of rash and negligent driving** மற்றும் " செயலே செப்பும்" **doctrine of res ipsa loquitur** சட்ட முதுமொழி ஆகியவற்றின் மூலம் அரசு தரப்பு சாட்சிகள் குறிப்பாக கவனக்குறைவு அல்லது அஜாக்கிரதை போன்ற குறிப்பிட்ட சொற்களை கூறி சாட்சியம் அளிக்காவிட்டாலும், அவர்களது சாட்சியத்தில் இருந்து எதிரி கவனக்குறைவாக அல்லது அஜாக்கிரதையாக வாகனம் ஓட்டியுள்ளார் என்று இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**(8.18).** விபத்து நடந்த இடத்தில் ஆனந்தகுமார் என்பவருக்கு வீடு இருப்பதாக, மாதிரி வரைபடத்திலோ, கண்ணுற்ற சாட்சியின் வாக்குமூலங்களிலோ குறிப்பிடவில்லை. சம்பவத்தில் வீடு இருந்ததற்கான ஆதாரங்களை எதிரியோ, அவருடன் பயணித்த ஆனந்தகுமார் மற்றும் குமார் ஆகியோர் கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. கொரோனா ஊரடங்கு காலத்தில், எதிரிகளும் அவருடன் பயணம் செய்த நபர்களும் சட்டத்திற்கு புறம்பாக இருசக்கர வாகனத்தில் பயணித்துள்ளார். எதிரியின் கவனக்குறைவு காரணமாக விபத்து ஏற்பட்டது என்பது இதன்மூலம் தெளிவாகிறது.

**(8.19).** மேலும் அ.சா.3 ஆனந்த் மற்றும் அ.சா.9 குமார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை அளித்த மருத்துவர்களிடம், இருசக்கர வாகனங்களில் மூன்று நபர்கள் பயணித்தபோது மற்றொரு இருசக்கர வாகனத்தில் மோதி பொன்னர் சங்கர் பள்ளி அருகே விபத்து ஏற்பட்டதாக கூறியதால் விபத்து பதிவேட்டு அறிக்கைகளில்

மருத்துவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனை மறைத்து சம்பவ இடம் அருகே நின்று பேசியதாக மேற்படி சாட்சிகள் எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சி அளித்துள்ளார்கள்.

**(8.20).** அவ்விதத்தில் சந்தேகத்தின் பலன் எவ்விதத்திலும் எதிரிக்கு சாதகமானதல்லதை தொடர்ந்து Ravi Kapur Vs State of Rajasthan Crl.A.No.1838 of 2009 எனும் வழக்கில் விபத்து வழக்கு குறித்த வழிகாட்டுதல்களை மாண்பமை உச்சநீதிமன்றம் முன் தீர்ப்பு வழங்கியுள்ளது.

**(8.21).** The Rules of Road Regulations, 1989 விதி 2–ல், 2. Keep Left: The driver of a motor vehicle shall drive the vehicle as close to the left side of the road as may be expedient and shall allow all traffic when is proceeding in the opposite direction to pass on his right hand side மேலும், சாதாரண மனிதனும் இடது பக்கம் வாகனத்தை இயக்க வேண்டும் என இந்த பிரிவை எதிரி மீறியுள்ளார்.

கீழ்கண்ட உச்ச நீதிமன்ற வழக்குகளில் விபத்து வழக்குகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

It is further submitting that Hon'ble Supreme Court enlighten that 2003(1)LW.Crl.S.C.232 "Prosectution not to explain each and every hours delay – delay in sending the FIR to the Magistrate ip so facto Cannot be taken to be a ground for throwing out the prosecution case".

2001 MLJ(Crl)132 "Witness either related to deceased or a friend. Their testimony cannot be rejected only on the ground".

**(8.22).** விபத்து சேதங்கள் மற்றும் ஜான்பிரான்சிஸ் என்பவரின் உயிரிழப்பு மற்றும் அ.சா.2 சுந்தர்ராஜன், அ.சா.4 திரு. வெள்ளைத்துரை, அ.சா.5 மருத்துவர்

சுரேஷ், அ.சா.6 மருத்துவர் மகாலிங்கம் அகியோரின் மூலம் (Res ipso loquitor) செயலே செப்பும் பொருளே புகழும் எனும் சட்ட பழமொழியை அரசு தரப்பு நிரூபணம் செய்துள்ளது. 1999 MLJ Crl.135 MAD "even no direct evidence sketch will speak the truth (Res ipso loquitor)"

**(8.23).** பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தொடர்பான வழக்கு புலனாய்வு அதிகாரி தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் உள்ளிட்டவை இந்திய சாட்சிய சட்டம் 7–ன் கீழ் ஏற்புடையதுதான் என 2014(2) MLJ (Cri) 41 K. Ramaraj Vs State பக்கம் 41–ல் An observation Mahazar can be relevant under Section, 7of the evidence act only if it states as to what the police officer sees and notes at the place of occurance என குறிப்பிடப்பட்டுள்ளது.

2011 Crl.LJ 1440(SC) Ranjith Singh Vs State of M.P.

"Testimony of sole eye witness marking identification of accused – Can be relied upon credibility of evidence of close relatives."

AIR 2000 SC 1677

"A strict sentence should be awarded instead of a fine."

2004 MLJ (Crl) 31

"Con tradiction or omission alone shall not be a criterion to test the veracity of one's oral testimoney."

1998 MLJ Cri MAD 141

Sec. 134 IEA: Conviction can be based on evidence of single solitary witness.

**(8.24).** ஆகவே, மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில் இந்த வழக்கில் எதிரி கடந்த 28.05.2020–ம் தேதி TN 45 AQ 8239 என்ற பதிவெண் கொண்டுள்ள Bajaj Discover இருசக்கர வாகனத்தினை தகாதணிச்சலுடன்

கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் மனித உயிர்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் ஓட்டி ஜான் பிரான்சிஸ் ஓட்டி வந்த இரு சக்கரவாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், அந்த விபத்தின்போது ஜான்பிரான்சிஸ்–க்கு காயம் ஏற்பட்டது என்றும், ஜான் பிரான்சிஸ்க்கு ஏற்பட்ட காயத்தின் காரணமாக கொலைக்கு நிகராத மரணத்தை எதிரி ஏற்படுத்தியுள்ளார் என்றும், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 279, 337, 338, 304(A) r/w 128, 129 MV Act கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால், எதிரி மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி என்று குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 255(2)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**(8.25)** எதிரிக்கு வழங்கப்பட உள்ள தண்டனை குறித்து கேட்டபோது எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் மீதான குற்றங்களுக்கு அபராதம் தண்டனையாக வழங்கலாம் எனவும், எதிரிக்கு இந்த வழக்கைத்தவிர வேறு வழக்கு எதுவும் இல்லை என்றும், முதல் குற்றவாளி என்றும், நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளுக்கு தவறாமல் ஆஜரானவர் என்றும், எதிரியை நன்னடத்தை சட்டத்தில் விடுவிக்கவும் அல்லது குறைந்த பட்ச தண்டனையாக அபராதம் மட்டும் விதிக்கவும் கோரப்பட்டது.

**(8.26)** எதிரி தரப்பு வேண்டுகோள் பரிசீலிக்கப்பட்டது. எதிரிக்கு நன்னடத்தை சட்டத்தின் பலன்கள் கிடைக்கத்தக்கது அல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், எதிரிக்கு சிறை தண்டனை வழங்க உத்தரவிடுவது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகவே, மேற்படி

பரிசீலனைகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட தண்டனைகள் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக எதிரி இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் 279, 337, 338, 304(A) r/w 128, 129 MV Act –ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து சட்டம் 279 பிரிவின் கீழான குற்றத்திற்கு ஆறுமாதங்கள் மெய்காவல் சிறை தண்டனையும், ரூ.1000/–அபராதம் விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும், இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 337 ன் கீழான குற்றத்திற்கு ஆறுமாதங்கள் மெய்காவல் சிறை தண்டனையும், ரூ.1000/– அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும், இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 338 ன்கீழான குற்றத்திற்கு ஆறுமாதங்கள் மெய்காவல் சிறை தண்டனையும், ரூ.1000/– அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும், இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 304(A)ன்கீழான குற்றத்திற்கு இரண்டு வருடம் மெய் காவல் சிறை தண்டனையும் ரூ.1000/– அபராதம் விதித்தும் அபராதம் கட்ட தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், மோட்டார் வாகனச்சட்டம் பிரிவு 128–ன் கீழான குற்றத்திற்கு ரூ.1000/– அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும், மோட்டார் வாகனச்சட்டம் பிரிவு 129–ன் கீழான குற்றத்திற்கு ரூ.1000/– அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும்,குற்றவியல் விசாரணைமுறை சட்டம் பிரிவு 255(2)–ன்படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிக்கு ஒவ்வொரு குற்றச்சாட்டின் கீழும் விதிக்கப்பட்டுள்ள தண்டனை ஏககாலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ.6000/–.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 04–ம் நாள் அவை அறிய பகரப்பட்டது.

ASHOKUMAR R

Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.06.04 18:33:35 +0530

நீதித்துறை நடுவர்
மணப்பாறை.

**இணைப்பு:**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1. | : | திருமதி. ஜெயமேரி |
| அ.சா.2. | : | திரு. சுந்தரராஜன் |
| அ.சா.3 | : | திரு. ஆனந்த் |
| அ.சா.4 | : | திரு.வெள்ளத்துரை |
| அ.சா.5 | : | திரு. சுரேஷ் (மருத்துவர்) |
| அ.சா.6 | : | திரு.மகாலிங்கம் (மருத்துவர்) |
| அ.சா.7 | : | திரு. மணிவண்ணன் (மோட்டார் வாகன ஆய்வாளர்) |
| அ.சா.8 | : | திரு.ராஜகோபால் (காவல் உதவி ஆய்வாளர்) |
| அ.சா.9 | : | திரு. குமார் |
| அ.சா.10 | : | திருமதி. ஜெயதேதி (காவல் ஆய்வாளர்) |
| அ.சா.11 | : | திரு. பாலாஜி(காவல் ஆய்வாளர்) |

<u>அரசுதரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1. | : | புகார் மனு |
| அ.சா.ஆ.2. | : | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3. | : | குமாருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.4 | : | ஆனந்தகுமாருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.5 | : | அஜீத்குமாருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.6 | : | குமார் என்பவருக்கு சிந்துஜா மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்ட காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.7 | : | TN 54 D 2230 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் ஆய்வு அறிக்கை |
| அ.சா.ஆ.8 | : | TN 45 AQ 8239 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் ஆய்வு அறிக்க |
| அ.சா.ஆ.9 | : | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.10 | : | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.11 | : | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.12 | : | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.13 | : | சட்ட மாறுதல் அறிக்கை |

<u>அரசு தரப்பில் சான்று பொருட்கள்</u>: இல்லை

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்<u>: இல்லை</u>

ASHOKUMAR R

Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.06.04 18:33:08 +0530

நீதித்துறை நடுவர்

மணப்பாறை.

<u>பின்குறிப்பு:–</u>

1. வழக்கில் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.
3. இவ்வழக்கின் தீர்ப்பு நகல் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.